In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவாநுட்டான விதியும் விளக்கங்களும்

"சைவ சித்தாந்த சரபம்"

சிவஞ்சீ தத்புருஷ தேசிகர் அவர்கள்

தேவக்கோட்டை

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவாநுட்டான
விதியும் விளக்கங்களும்

வெளியீடு

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச்

சைவ நெறிக்கழகம்

24.1.1997

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

❑
முதற்பதிப்பு
1967

❑
இரண்டாம் பதிப்பு
1986

❑
மூன்றாம் பதிப்பு
1997

❑
பக்கம்
X + 74

❑
படிகள் 1000

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

உ

சிவமயம்

பாலருவாயர் துணை



" சைவ சித்தாந்த சரபம் "

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

தெய்வ மணங்கமழும் செய்யதிருத் தாள்பணிவோம்
சைவ நலம்பரப்பும் தத்புருஷம் - உய்வுதரும்
ஆரா அமுதனைய அஞ்செழுத்தை நெஞ்சழுத்தும்
மாராம நாதகுரு மன்.

- " சத்யோஜாததேவநாம "
வீ. மாரியப்ப செட்டியார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

நிலவுலகத்தில் உள்ள சமய கோடிகள் அனைத்திலும் சைவ சமயம் மேலானது. சைவ சமயிகள் சைவ நூல்களில் விதிக்கப்பெற்ற நெறிமுறைகளில், வழுவாது நிற்றல் வேண்டும். சைவத்தின் தாயகமான ஒழுக்கம், "கொலை புலை நீக்கி, எல்லா வுயிர்களிடத்திலும் அன்பு வைத்து வாழுத"லாகும். முதற்கண்ணதாகிய இதனை ஒட்டிச், சிவாகமத்தில் விதிக்கப்பெற்றபடி, தக்க ஞானாசிரியரையடைந்து, சிவதீட்சை பெற்றுச் சைவா சாரசம்பன்னர்களாய் வாழவேண்டுவதும், இன்றியமையாததாகும்.

மனிதனைச், சைவனாக ஆக்குவது "சமயதீட்சை". இத்தீட்சையைப் பெற்றவர்கள், திருநீறு, உருத்திராக்க தாரணத்தையும், ஸ்ரீ பஞ்சாட்சர ஜெபத்தையும், விடாது மேற்கொள்ளும் உரிமையை உடையவர்கள். இவர்களுக்கு முறையான பயனை வழங்குவது, நாள்தோறும் இவர்கள் செய்துவரும் சைவாநுட் டானமேயாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

சைவாநுட்டான விதியை, விளக்கங்களுடன் நம் குருநாதர் "சைவசித்தாந்த சரபம்" சிவஸ்ரீதத்புருஷ தேசிகரவர்கள் எழுதியருளி உள்ளார்கள்.

இந்நூலை எழுதியுதவிய நம் குருநாதர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களுக்கு, எங்கள் திரிகரண சுத்தியுடன் கூடிய வணக்கங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்புள்ள

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
தமிழகச் சைவநெறிக் கழகத்தினர்

கிளை :
17, தெற்கு வீதி
மலைக்கோட்டை
திருச்சி 2

தலைமை :
47, அக்ரஹாரம்
வரகனேரி,
திருச்சி 8

செயலகம்:
பாலறாவாயர் நிலையம்
5, சம்பந்தர் தெரு,
தேவகோட்டை - 630 302.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பாலறாவாயர் துணை

முன்னுரை

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான், உயிர்கள் அனைத்தும் உய்திபெறவேண்டுமென்று திருவுளங்கொண்டு அருளிச் செய்த முதனூல்கள் வேத, சிவாகமங்களாகும். இவற்றுள் வேதம் உலக மக்கள் பொருட்டும், சிவாகமம் அவருட் சத்திநி பாதம் பெற்ற பக்குவிகள் பொருட்டும் வெளி வந்தவை.

நிலையான இன்பப்பேறு எல்லாவுயிர்களுக்கும் இன்றியமையாததேயாயினும், பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்று வாழ்கின்ற நம்மனைவர்க்கு அது மிக மிக இன்றியமையாத ஒன்றாகும்.

நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்புக்களுக்குட் படுகின்ற எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களுள் மானுடப் பிறப்பையடைவது, கடலைக் கையால் நீந்திக் கரைசேருவது போன்ற தென்று ஆன்றோர் அருளுவர். மனிதருள்ளும் சைவராகப் பிறப்பதற்குப் பலபிறப்புக்களில் தவஞ் செய்திருக்க வேண்டும். பெருந்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

தவம் செய்து சைவராகப் பிறக்கும் பேறுபெற்றவரனைவரும் சிவபெருமானை விதிப்படி வழிபட்டுச் சித்தாந்த முத்தியாகிய பேரின்ப வீட்டை அடைய முற்படல் வேண்டும்.

கடவுள், சிவபெருமானாகிய ஒருவரே என்பதும் உயிர்கள் எண்ணிலாதன என்பதும் அவ்வுயிர்கள் கடவுளையடையத் தடையாக உள்ளது மலமென்பதும், இம்மூன்றும் தோற்ற நிலையொடுக்கங்களில்லாத அநாதி நித்தியப் பொருள்கள் என்பதும், கேவல நிலையில் பாச பந்தத்தாற் சடம் போற்கிடந்த உயிர்களுக்குச் சிவபெருமான் தனது பெருங்கருணையால் உடல் முதலிய பொருள்களை மாயையிலிருந்து படைத்து உதவி அவற்றின் அறிவிச்சை செயல்களை ஒருவாறு விளங்க வைத்தருளினாரென்பதும், அதனால் உயிர்களுக்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகப் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் ஆகிய நால்வகைச் சமயநெறிகளிலும் அவைகள் நின்றுழன்று இறுதியில் புண்ணிய மிகுதியால் சித்தாந்த சைவ சமயத்தை வந்தடைந்து சமய, விசேட நிருவாண தீட்சைகளைப்பெற்றுச்சரியை, கிரியை, யோகங்களாகிய நற்றவங்களைச் செய்து அவற்றால் வரும் பதமுத்திகளைப் பெறும் என்பதும் சிவஞானம் கைவரச் சிவத்துடன் இரண்டறக் கலப்பதாகிய சித்தாந்த முத்தியைப் பெறுமென்பதும் ஞான நூல்களினால் உணரப் பெறும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உண்மை முடிபுகளாம்.

இக்காலத்திற் சிலர் ஊனுண்டலை நீக்குவதே சைவமென்று கருதுகின்றார்கள், இன்னுஞ்சிலர் சமயத்திற்குரிய பெயராகிய சைவம் என்பதைச் சாதிக்குரிய பெயராக ஆக்கிக்கொண்டு, தாங்களை சைவர் என்று சொல்லிக் கொள்ளுகின்றார்கள. சிவதீட்சை பெற்றுச் சமயாசாரத்தை விடாது கடைப்பிடித்து வருபவர்களையன்றி, மற்ற எவரையும் சைவர்களென்று சைவ நூல்களும், சைவ பாரம்பரியமும் ஏற்றுக்கொள்ள மாட்டா.

எல்லாச் சமயங்களுக்கும் அவ்வவற்றிற்கெனத் தனித்தனியே சமயச் சடங்குகளிருப்பதை நாமறிவோம். பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் சமயச் சடங்குகளால் அவ்வச் சமயங்களுக்கு உரிமையுடையனவாகின்றனவே யன்றிப் பிறப்புரிமை பற்றி எந்தக் குழந்தைக்கும் சமயச் சார்பு உண்டாவதில்லை என்பது சமயவாதிகளனைவ ராலும் ஒப்புக் கொள்ளப்பெற்ற உண்மையாகும். அந்த முறைப்படி சைவத் தந்தை தாயாருக்குப் பிறக்கும் ஒரே காரணம் பற்றி யாரும் சைவர் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் உரிமையுடையவராகமாட்டார். சமய தீட்சை பெற்றுச் சைவாநுட்டானம் முதலியவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுபரே சைவர் ஆவர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

இதுபற்றியே சைவக் குடும்பத்திற் பிறந்த ஆடவர், பெண்டிராகிய இருபாலாரும் ஏழு வயது முதல் ஒன்பது வயதுக்குள் சமய தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டுமென நமது விதி நூல்கள் வற்புறுத்திக் கூறுகின்றன். சைவ சமயத்தின் புறச் சாதனங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் முதலியவற்றை அணிவதும், சிவாலயப்பணி முதலிய திருத் தொண்டுகளை மேற்கொள்வதும் சமய தீட்சை பெற்றோர்கன்றி மற்றையோர்க்கு உரிய பயன்தர மாட்டா. சைவக்குடும்பத்திற் பிறப்பதற்குப் போலச், சமயம் முதலிய தீட்சைகளைப் பெறுவதற்கும் தவம் செய்திருக்க வேண்டும். அந்தத் தவத்தைச் செய்யாதவர் தங்களுக்குத் தக்க ஆசாரியர் கிடைக்கவில்லை யென்றும், சைவக்கிரியைகளுக்குத் தக்க காரணங்கள் காணமுடியவில்லை யென்றும், சைவ நுட்டான விதி விரிவாக உள்ளதென்றும் இன்னும் ஒவ்வாதனவாக எவ்வெவற்றையெல்லாமோ சொல்லி விலங்கு பறவைகள் போல உண்ணுவதும் உறங்குவதும் ஆகியவற்றையே செய்து காலங்கழித்து வருகிறார்கள். மானுடப் பிறப்பின் அருமையையும், நீர்மேல் எழுத்துப் போன்ற இவ்வுடல் இயல்பையும், இராசாங்கத்தமர்ந்த வைதீக சைவத்தின் உயர்வையும் அதிற்கூறப் பெறும் நெறிமுறைகளின் சிறப்புக்களையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உள்ளவாறு உணர்ந்தால் சிவதீட்சை பெற்றுச் செந்நெறி கடைப்பிடித் தொழுகுவதில் இவர்கள் ஒரு போதும் பின்வாங்க மாட்டார்கள்.

தாமும் கெட்டுப் பிறரையும் கெடுக்க முயலும் புல்லுருவிகள் நாட்டில் எப்பொழுதும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களை நினைந்திரங்கி அவர்களுக்கு விரைவில் நல்லபுத்தி வழங்க வேண்டு மென்று ஆண்டவனை வேண்டுவதன்றி நாம் என் செய்ய வல்லேம் ? அது கிடக்க.

முறையாகச் சிவதீட்சை பெற்றுச் சைவாநுட்டானம் செய்துவரும் மெய்யன்பர்களுக்கு உதவியாக இந்நூல் வெளிவருகின்றது. இதில் சைவாநுட்டான விதியும், அவற்றிற்குரிய விளக்கங்களும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. செயல்களைச் செய்யும் பொழுது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களும் ஒன்று பட்டாலன்றிப் பரிபூரணமான பயனைப் பெற முடியாது. சைவாநுட்டானம் பாவனை, மந்திரம், கிரியை என முத்திறப்பட்டு முக்கரணங்களாலும் செய்யப்பெறும். பாவனையின்றி ஒதப்பெறும் மந்திரங்களும், செய்யப்பெறும் கிரியைகளும் குறித்த பயனைத் தரமாட்டா. ஒவ்வொரு கிரியையும் எதற்காகச் செய்யப் பெறுகிறதென்பது தெரிந்தாலன்றிப் பாவனை உண்டாகாது. ஆதலால் எல்லாக் கிரியைகளுக்கும் இதில் விளக்கம் கூறப்பெற்றுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

மந்திரம், நினைப்பவர்களைக் காப்பது என்னும் பொருளையுடையது. அதனை ஒலி வேறுபாடு உண்டாகாது கணித்தல் வேண்டும். அதற்காகத் தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றுள்ள மந்திரங்களில் வடமொழி உச்சரிப்பைப் புலப்படுத்த மேலெண்கள் கொடுக்கப்பெற்றுள்ளன.

கிரியைகள் முத்திரைகளை அடிப்படையாகக் கொண்டவை. அதனால் முத்திரைகளின் விளக்கங்களும் படங்களும் இதில் சேர்க்கபெற்றுள்ளன.

அநுட்டான வேளையில் தியானம் செய்ய வேண்டிய தெய்வங்களின் திருவுருவங்களைச் சிந்திப்பதற்கு வசதியாகத் தியானச் செய்யுட்களும், பெரும் பயனை விரைந்து தருகின்ற அருளாசிரியர்களின் தோத்திரப் பாடல்களும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன.

வைதிக சந்தியைவிடச் சைவ சந்தி மிக மிக உயர்ந்ததாகும், வைதிக சந்திக்குச் சாட்சி சூரியன் எனவும் சைவ சந்திக்குச் சாட்சி சிவ சத்தி எனவும் கொள்ளப்பெறுவதே இதற்குத் தக்க சான்றாகும். ஆதி சைவர்களாகிய சிவா சாரியர்கள் வைதிக சந்தி சைவ சந்தி ஆகிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

இரண்டுக்கும் உரிமையுடையவர்களாயினும் அவர்கள் வைதிக சந்தியை விட்டாலும் சைவ சந்தியை ஒருபோதும் விடலாகாதென்று சிவாகமங்கள் கூறுகின்றன. இதனால் வைதிகர்களை விடச் சைவர்கள் உயர்ந்தவர்கள் என்பது விளங்கும்.

சைவர்களில் பெரும்பாலோர் திருமணம், சிரார்த்தம் முதலிய கிரியைகளில் புறச் சமயத்தவர்களாகிய சுமார்த்தர், வைணவர் முதலியவர்களைக் கொண்டு அவர்களுக்கு உரிமையில்லாத கிரியைகளைச் செய்வித்து வீணாகப் பொருட் செலவுடன், பலனையிழந்து குற்றத்திற்கும் உரியவர்களாகின்றார்கள். சைவர்கள் எல்லோரும் சைவா சாரியர்களைக் கொண்டு சைவக் கிரியைகளையே செய்து உரிய பலன்களைப் பெறுவார்களாக.

சைவாநுட்டானக் கிரியைகளைத் தெளிவுபெற விளக்கும் நூலொன்று இப்போதைக்கு ஏற்ற முறையில் எழுதி வெளியிடல் வேண்டுமென்று அன்பர் பலர் விரும்பினர். அவ் விருப்பமே இந்நூலாக உருப்பெற்று வெளிவருகின்றது.

நலமே தழைக
தேவகோட்டை
24.1.1997

அன்புள்ள
தத்புருஷதேசிகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவானுட்டான விதியும் விளக்கங்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவாநுட்டான விதியும் விளக்கங்களும்

காப்பு

அத்தி முகவனை, நித்தம் நினைபவர்
சித்தி திருவொடு, முத்தி பெறுவரே

1. பாத்திர சுத்தி

அநுட்டான பாத்திரத்தைத் துலக்கிச் சுத்தம் செய்து அஸ்த்ர மந்திரம் உச்சரித்துக் கழுவி வைத்துக் கொள்க.

2. அநுட்டானத்திற்குரிய திக்குகள்

வடக்கு நோக்கியேனும், கிழக்கு நோக்கியேனும் மரப்பலகை, மான்தோல் முதலிய ஆசனங்களில் பருத்தித் துணியை விரித்து வலது கால் வெளிப்புறம் இருக்கப் பத்மாசனமாக உட்கார்ந்து கொண்டு நெற்றியிலும் உடம்பிலும் உத்தூளனமாகத் திருநீறு பூசிக் கொள்க. நீர் நிலைகளிலாயின் முழந்தாள் அளவு நீரில் நின்று கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

3. பூமி சுத்தி

அநுட்டான பாத்திரத்தில் வெளஷடந்த ஹ்ருதய மந்திரம் உச்சரித்து நீர் நிரப்பி, அநுட்டான ஸ்தானத்தில் பட் அந்த அஸ்த்ரமந்திரம் உச்சரித்துக் கவிழ்ந்த பதாகை முத்திரையால்நீர் தெளித்து, அநுட்டான பாத்திரத்தை முன்னே வைத்துக் கொள்க.

4. கணபதி குரு வணக்கம்

கணபதி மூல மந்திரம் உச்சரித்துச் சிகாமுத்திரையால் தலையில் இரண்டு பக்கங்களிலும் மூன்று முறை குட்டிக் கொண்டு கணபதியைத் தியானிக்க, குருமூலமந்திரம் உச்சரித்து நமஸ்கார முத்திரையால் குருவைத் தியானித்துக் கும்பிடுக

5. ஜல சுத்தி

அநுட்டான ஜலத்தில் சிவமூல மந்திரம் உச்சரித்துத் திவ்யமுத்திரையால் நிரீக்ஷணமும், பட்அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துக் கவிழ்ந்த பதாகை முத்திரையால் புரோக்ஷணமும், அந்த மந்திரத்தையே உச்சரித்து அதோ முகி முத்திரையால் தாடனமும், வெளஷடந்த கவச மந்திரம் உச்சரித்துச்சோதிக முத்திரையால் அப்யக்ஷணமும், பட்அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

கோவிடாண முத்திரையால் தாளத்திரயமும், அந்த மந்திரத்தையே உச்சரித்துச் சோடிகா முத்திரையால் திக் பந்தனமும், வெளஷட்ந்த கவச மந்திரம் உச்சரித்து அதி தீக்ஷண முத்திரையால் அவகுண்டனமும், வெளஷடந்த சிவமூல மந்திரம் உச்சரித்துத் தேனு முத்திரையால் அமிர்தீகரணமும் ஆகிய அஷ்ட சம்ஸ்காரங்களையும் செய்க.

6. ஜலப் புரோக்ஷணம்

வெளஷடந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துக் கோமுக முத்திரையால் சிரசில் நீரை மும்முறை தெளித்துக் கொள்க.

7. அஸ்த்ர சந்தியோபாசனம்

ஸ்வாகாந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்து இரண்டு கைகளையும் கூட்டிச்சங்க முத்திரையால் சூரிய மண்டலத்திலிருக்கும் சிவபெருமானுக்கு மூன்று முறை தர்ப்பணம் செய்து அஸ்த்ர காயத்ரியை 10 உருஜபித்து மீண்டும் ஸ்வாகாந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்து ஒருமுறை தர்ப்பணம் செய்க.

8. ஆசமனம்

மூன்று ஆசமன மந்திரங்களையும் உச்சரித்து கோகர்ண முத்திரையால் உள்ளங்கையிற்சார்ந்த உளுந்தமிழ்ந்தும் நீரை மந்திரத்திற்கு ஒரு முறையாக மும்முறை பருகுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

9. அதர சுத்தி

பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துப் பதாகை முத்திரையால் பெருவிரல் அடிகொண்டு வலமிருந்து இடமாக இருமுறையும், உள்ளங்கை கொண்டு மேலிருந்து கீழாக ஒருமுறையும் உதடுகளைத் துடைக்க.

10. தொடுமிடம்

வௌஷடந்த ஹ்ருதய மந்திரம் உச்சரித்துத் திவ்ய முத்திரையால் முகம், வலது இடதுமூக்கு, வலது இடதுகண், வலது இடதுகாது, தொப்பூழ், மார்பு, வலது இடது தோள், சிரம் என்னும் 12 இடங்களையும் தொடுக.

11. கர சுத்தி

பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துச் சாண முத்திரை கொண்டு வலக்கையால் இடது உள்ளங்கையை இருமுறையும், புறங்கையை ஒரு முறையும், இடக்கையால் வலது உள்ளங்கை புறங்கைகளை ஒவ்வொரு முறையும், பின்பு வலக்கையால் இடது உள்ளங்கையை இரு முறையும் புறங்கையை ஒரு முறையும் துடைக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

12. விபூதி சுத்தி

சிவ மூல மந்திரம் உச்சரித்து மிருகமுத்திரை கொண்டு திரு நீற்றை எடுத்து இடது உள்ளங்கையில் வைத்துப் பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துத் தீக்ஷணமுத்திரை யால் ஜலம்புரோக்ஷித்து அந்தத் திருநீற்றில் திவ்ய முத்திரை கொண்டு அணு அளவு எடுத்து ராட் சசர்களால் உண்டாகும் இடையூறுகள் நீங்கும் பொருட் டு நிருதி மூலையில் ஹும்பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துத் தெறித்துக்கையிலிருக்கும் திருநீற்றில் நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்யுக்ஷணம் ஆகிய நான்கு சுத்திகளையும் செய்து நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளைத் தியானித்து வலக்கரம் கொண்டு கவிழ்ந்த பதாகை முத்திரையால் மூடிஐந்து கலா மந்திரங்களையும் ஒருமுறை ஜபித்து
திக்பந்தனமும், அவகுண்டனமும் செய்து சம்ஹிதா மந்திரங்களை ஒரு முறை ஜபித்து விபூதி உருத்திரரைத் தியானிக்க

13. அமல ஸ்நானம்

சுத்தி செய்த திருநீற்றில் திவ்ய முத்திரையால் சிறிது எடுத்துப் பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துச் சிரசு முதல் பாதம் வரை உத்தூளனமாக அபிஷேகித்துக் கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

14. பஸ்ம ஸ்நானம்

எஞ்சிய விபூதியில் ஹ்ருதய மந்திரம் உச்சரித்து நிரோதான முத்திரையால் ஜலம் விட்டு, வௌஷடந்த கவச மந்திரம் உச்சரித்துக் குழைத்து நடுவிரல் மூன்றும் கொண்டு திரிபுண்டரமாகச் சிரசு, நெற்றி, மார்பு, தொப்பூழ் வலது இடது முழந்தாள் ஆகிய இடங்களில் முறையே பஞ்சப் பிரம மந்திரங்களை உச்சரித்தும், வலது இடது தோள், வலது இடது முழங்கை, வலது இடது மணிக்கட்டு, வலது இடதுவிலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் சத்யோஜாத மந்திரத்தை உச்சரித்தும் பூசிக்கொள்க.

15. மந்திர ஸ்நானம்

வௌஷடந்த கவச மந்திரம் உச்சரித்துக் கையில் ஒட்டியிருக்கும் விபூதியைக்கழுவி அந்த நீரைப் பிடித்துப் பஞ்சப் பிரம மந்திரம் ஜபித்து வௌஷடந்த சிவமூலம் மந்திரம் உச்சரித்துச் சிரசில் தெளித்துக் கொள்க. அஸ்த்ர மந்திரசி உச்சரித்துக் கையைக் கழுவி, பூமியிற் சிந்திய திரு நீற்றைப் பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துத் தாளத்திரயம் செய்துவாரி எடுத்து ஹ்ருதய மந்திரம் உச்சரித்துச் சங்கார முத்திரை கொண்டு ஹ்ருதயத்தில் ஒடுக்கிக் கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

16. மானத ஸ்நானம்

முன் போல் ஆசமனம், அதர சுத்தி செய்து தொடுமிடம் தொடுக. பிராணன் முதலிய வாயுக்களை அடக்கியிருந்து கொண்டு சிவமூல மந்திரத்தைச் சிந்தித்துச் சிவத்தோடு இரண்டறநின்று சிவ சத்தியின் வலது கரத்திலிருந்து ஒழுகும் அமுத வெள்ளத்தில் உடல் முழுவதும் நனைந்து உள்ளும் புறமும் தூய்மை பெற்றதாகப்பாவிக்க.

17. கரநியாசம்

பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துச் சாண முத்திரை கொண்டு வலதுகையால் இடது உள்ளங்கையை இரண்டு முறையும், புறங்கையை ஒரு முறையும், இடக்கையால் வலது உள்ளங்கை புறங்கைகளை ஒவ்வொரு முறையும் துடைத்து வௌஷடந்த சக்தி மந்திரம் உச்சரித்து இரண்டு கைகளையும் பிரசன்ன முத்திரையால் புருவ நடுவரை உயர்த்திப் பின்பு இருகரங்களையும் சேர்த்து விரித்து அதிட்டான முத்திரையால் உள்ளங்கைகளில் சிவாசன மந்திரம் உச்சரித்து ஒரு முறையும் சிவமூர்த்தி மந்திரம் உச்சரித்து ஒருமுறையும் நியசித்து. உஷ்ணீக முத்திரையால் ஈசான மந்திரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உச்சரித்துப் பெருவிரல்களையும், சின் முத்திரையால் தத்புருஷமந்திரம் உச்சரித்துச் சுட்டுவிரல்களையும், மோக முத்திரையால் அகோர மந்திரம் உச்சரித்து நடுவிரல்களையும், திவ்ய முத்திரையால் வாம தேவ மந்திரம் உச்சரித்து அணிவிரல்களையும், ஆக்கிர முத்திரையால் சத்யோ ஜாத மந்திரம் உச்சரித்துச் சிறு விரல்களையும் நியசித்து, அதிட்டான முத்திரையால் வித்யாதேக மந்திரம் உச்சரித்து உள்ளங்கைகளில் நியசித்து, கடா முத்திரையால் நேத்திர மந்திரம் உச்சரித்தும், ஆவாஹன முத்திரையால் சிவமூல மந்திரம் உச்சரித்தும் உள்ளங்கைகளில் நியசித்து, ஆக்கிர முத்திரையால் ஹ்ருதய மந்திரம் உச்சரித்துச் சிறு விரல்களிலும் திவ்ய முத்திரையால் ஸ்வாஹாந்த சிரமந்திரம் உச்சரித்து அணிவிரல்களிலும், மோக முத்திரையால் வஷடந்த சிகா மந்திரம் உச்சரித்து நடு விரல்களிலும், சின் முத்திரையால் வெளஷடந்த கவச மந்திரம் உச்சரித்துச் சுட்டு விரல்களிலும், உஷ்ணீக முத்திரையால் பட் அந்த அஸ்த்ரமந்திரம் உச்சரித்துப் பெருவிரல்களிலும் நீவி நியசித்து ஆன்மலீக முத்திரையால் வெளஷடந்த கவச மந்திரம் உச்சரித்துக் கைகளைச்சுற்றி அவகுண்டனம் செய்து நமஸ்கார முத்திரையால் வெளஷடந்த சிவமூல மந்திரம் உச்சரித்து இரண்டு கைகளையும் கூப்புக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

18. அங்க நியாசம்

பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துச் சாண முத்திரை கொண்டு இருகைகளாலும் பாதம் முதல் சிரசு வரை துடைத்து வெளஷடந்த சக்தி மந்திரம் உச்சரித்துநமஸ்கார முத்திரையால் புருவ நடுவுக்கு நேராக அஞ்சலி செய்க. சிவாசன மந்திரம், உச்சரித்துத் திவ்ய முத்திரையால் ஹ்ருதயத்தில் ஆசனம் கற்பித்து, சிவமூர்த்தி மந்திரம் உச்சரித்து அதே முத்திரையால் ஹ்ருதயத்தில் மூர்த்தியை நியசித்து ஈசான மந்திரம் உச்சரித்து உஷ்ணீக முத்திரையால் தலை உச்சியிலும், தத்புருஷ மந்திரம் உச்சரித்துச் சின் முத்திரையால் புருவ நடுவிலும், அகோர மந்திரம் உச்சரித்து மோக முத்திரையால் மார்பிலும், வாமதேவ மந்திரம் உச்சரித்துத் திவ்ய முத்திரையால் தொப்பூழிலும், சத்யோ ஜாத மந்திரம் உச்சரித்து ஆக்கிரமுத்திரையால் தனித்தனியாக வலது, இடது முழந்தாள்களிலும் நியசித்து, வித்யா தேகமந்திரம் உச்சரித்துத் திவ்ய முத்திரையால் மார்பில் நியசித்து, நேத்திர மந்திரம் உச்சரித்து ஆக்கிர கண்ட முத்திரையால் மூன்று கண்களிலும் நியசித்து, சிவ மூல மந்திரம் உச்சரித்துத் திவ்ய முத்திரையாலும், ஹ்ருதய மந்திரம் உச்சரித்து ஆக்கிர முத்திரையாலும், மார்பில் நியசித்து ஸ்வாஹாந்த சிர மந்திரம் உச்சரித்துத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

திவ்ய முத்திரையால் உச்சியிலும், வஷடந்த சிகா மந்திரம் உச்சரித்து மோக முத்திரையால் சிகையிலும் வௌஷடந்த கவச மந்திரம் உச்சரித்து நாராச முத்திரையால் கழுத்திலிருந்து மார்பு வரையிலும், பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்து உஷ முத்திரையால் வலது இடது உள்ளங்கைகளிலும், நியசித்து அதே மந்திரம் உச்சரித்துக் கோவிடான முத்திரையால் தாளத்திரயம் செய்து, அதே மந்திரம் உச்சரித்து சோடிகா முத்திரையால் சிரசைச் சுற்றித் திக்பந்தனமும், வௌஷடந்த கவச மந்திரம் உச்சரித்து அதிதேஷண முத்திரையால் சிரசைச் சுற்றி கீழ் நோக்கி அவகுண்டனமும் செய்து வௌஷடந்த சிவமூல மந்திரம் உச்சரித்து மகா முத்திரையால் பாதாதிகேச பரியந்தயம் துடைக்க.

19. பிராணாயாமம்

வராக முத்திரையால் வலதுநாசியை மூடிக்கொண்டு இடது நாசியைத் திறந்து அஸ்த்ர மந்திரம் உச்சரித்து மூச்சை உள்ளே இழுத்து இடது நாசியை மூடிக்கொண்டு வலது வாசியைத் திறந்து அஸ்த்ர மந்திரம் உச்சரித்து மூச்சை வெளியில் விட்டுப் பின்னர் வலது நாசியை மூடி இடது நாசி வழியாக சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து மூச்சை உள்ளே இழுத்து இரண்டு நாசிகளையும் மூடிச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து மூச்சை உள்ளே நிறுத்தி இடது நாசியை மூடி வலது நாசியைத் திறந்து சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து மூச்சை வெளியே விடுக. சிவ மூல மந்திரம் உச்சரித்துப் பதாகை முத்திரை கொண்ட வலக்கையால் வலது காதை மூடுக.

20. சிவ தீர்த்த கரணம்

வெளஷடந்த ஹ்ருதய மந்திரம் உச்சரித்து அங்குச முத்திரையால் புருவ நடுவிலுள்ள விந்துத் தானத்திலிருந்து அமிர்தத்தை எடுத்து நீரில் வைத்துச் சிவ மூல மந்திரம் உச்சரித்துப் பதாகை முத்திரையால் அப்மந்திரித்துத் திக்பந்தனம், அவ குண்டனங்கள் செய்து தேனுமுத்திரை கொடுக்க.

21. சந்தியா தியானம்

காலை வேளையில் பிராமியை ஹ்ருதயத்திலும் மத்யான வேளையில் வைணவியைப் புருவ நடுவிலும், சாயுங் காலத்தில் ரௌத்திரியைப் பிரமரந்திரத்திலும், இரவில் பராசத்தியைத் துவாத சாந்தத்திலும் அவ்வவர் மூல மந்திரம் உச்சரித்துத் தியானிக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

22. மந்திராபிஷேகம்

வலக்கையினால் நீரை எடுத்து ஹ்ருதய மந்திரம் உச்சரித்து இடது கையில் விட்டுக் கும்ப முத்திரையாகப் பிடித்துக் கொண்டு வலதுகையால் மூடிச் சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து வலக்கையில் விட்டு வெளஷடந்த சிவமூல மந்திரம் உச்சரித்துச் சிரசில் தெளித்துக் கொள்க.

23. மார்ஜனம்

அநுட்டான நீரைக் கவிழ்ந்த பதாகை முத்திரை கொண்ட வலக்கையால் மூடிச் சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து அபிமந்திரித்து வலது கையால் நீரை எடுத்து ஹ்ருதய மந்திரம் உச்சரித்து இடது கையில் விட்டுத் திரு முத்திரையால் இடது கை விரலிடுக்குகளின் வழியாக விழும் நீரை வலது கரத்தால் வெளஷடந்த சம்ஹிதா மந்திரங்கள் பதினொன்றையும் உச்சரித்து மந்திரத்திற்கு ஒரு முறையாகச் சிரசில் தெளித்துக் கொள்க.

24. அகமர்ஷணம்

மார்ஜனம் செய்தபின் இடக்கையில் எஞ்சியிருக்கும் நீரை வலக்கையில் விட்டுப் பதாகை

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

முத்திரையால் மூக்கருகில் பிடித்துப் பூரக வாயுவுடன் அந்த நீர் இடது நாசிவழியாக உள்ளே புகுந்ததாகவும் கும்பக வாயுவுடன் அது உள்ளிருக்கிற பாவத்தை அழித்ததாகவும் அழிக்கப்பட்ட பாவத்தோடு அந்நீர் ரேசக வாயுவுடன் வலது நாசி வழியாக மீண்டும் கையில் வந்து சேர்ந்ததாகவும் பாவித்து அந்நீரை ஹும்பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்து ஊர்த்துவமுகி முத்திரையால் வலது கால் பெருவிரலில் புருவ நெறிப்புடன் விட்டுப் பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துக் கைகளைக் கழுவுக.

25. ஆசமன சகளீகரணம்

முன்பு போல் ஆசமனம், அதர சுத்தி செய்து தொடுமிடம் தொட்டுக் கரநியாச அங்க நியாசங்கள் செய்க.

26. கவச வேஷ்டனம்

நிமிர்த்திய பதாகை முத்திரை கொண்டு அமுதமயமான நீரை அள்ளி வௌஷடந்த கவச மந்திரம் உச்சரித்துத் தன்னை வலமாகச் சுற்றிக் கீழே விடுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

27. சதா சிவத்தியானம்

சதாசிவ மூர்த்தியின் திருவுருவத்தைச் சிந்தித்துத் தியானிக்க.

28. காயத்திரி ஜபம்

சிவ காயத்ரி மந்திரம் உச்சரித்துச் சங்க முத்திரையால் மூன்று முறை தர்ப்பணம் செய்து அம் மந்திரத்தைப் பத்து முறை ஜபித்து மீண்டும் ஒரு முறை தர்ப்பணம் செய்க.

29. தர்ப்பணம்

ஸ்வாஹாந்த சிவமூலமந்திரம் உச்சரித்துச் சங்க முத்திரையால் மூன்று முறை தர்ப்பணம் செய்து சிவமூல மந்திரத்தை 10 உரு ஜபித்து மீண்டும் முன்பு போல் ஒருமுறையும் ஸ்வாஹாந்த சம்ஹிதா மந்திரங்களால் ஒவ்வோரு முறையும் தர்ப்பணம் செய்க. பின்பு மந்திரங்களுக்கும் தேவர்களுக்கும் ஸ்வாஹாந்த மூல மந்திரம் உச்சரித்துத் தேவதீர்த்தத்தாலும், இருடிகளுக்கு நமாந்த மூலமந்திரம் உச்சரித்து ஆரிட தீர்த்தத்தாலும், மானுடருக்கு வஷடந்த மூலமந்திரம் உச்சரித்து மானவ தீர்த்தத்தாலும், பூதங்களுக்கு வௌஷடந்த மூலமந்திரம் உச்சரித்துப் பூததீர்த்தத்தாலும், பிதுர்க்கள், ஞாதிகள், ஆசாரியர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

ஆகியோர்களுக்கு ஸ்வதாந்த மூல மந்திரம் உச்சரித்துப் பிதுர்தீர்த்தத்தாலும், தர்ப்பணம் செய்க பின்னர், கணபதி, ஸ்கந்தர், உமாதேவி, நந்தி, மஹாகாளர், பிருங்கி, விருஷபர், சண்டர் ஆகியோரின் ஸ்வாஹாந்த மூல மந்திரம் உச்சரித்துத் தனித்தனியே தர்ப்பணம் செய்க.

30. தீர்த்தோப சங்காரம்

முன்பு போல் ஆசமனம், அதர சுத்தி செய்துதொடுமிடம் தொட்டுச்சகளீகரணம் செய்து புருவ நடுவிலிருந்து எடுத்து முன்னர் நீரில்வைத்த அமுதத்தை வௌஷடந்த ஹ்ருதய மந்திரம் உச்சரித்து அங்குச முத்திரையால் எடுத்துப் புருவ நடுவில் ஒடுக்கிக் கொள்க.

31. சூரியோபஸ்தானம்

இரு கைகளையும் கூட்டி நீரை அள்ளிக் கொண்டு சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்துச் சூரிய மண்டலமத்தியிலிருக்கும் சிவபெருமானைத் தியானித்துச் சங்கமுத்திரை கொண்டு ஸ்வாஹாந்த சிவமூலமந்திரம் உச்சரித்து நீரை விட்டு அநுட்டான பலனை அவருக்குத் தத்தம் செய்து ஸ்வாஹாந்த சிவ சூரிய மூலமந்திரம் உச்சரித்து ஒரு முறை தர்ப்பணம் செய்து ஆசமனம் அதரசுத்தி செய்து தொடுமிடம் தொடுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

32. ஜபம்

முன்பு போலக் கணபதி குருவணக்கம், பிராணாயாமம், சகளீகரணம் முதலியவற்றைச் செய்து சதாசிவ மூர்த்தியைத் தியானித்துச் சிவ மூல மந்திரத்தை 108 உருவும், சம்ஹிதா மந்திரங்கள், உமாதேவி, கணபதி, சுப்பிரமணியர் மூலமந்திரங்களைத் தனித்தனியே 10 உருவும், அகோர மந்திரத்தை 21 உருவும் ஜபித்து சகளீகரணம், ஆசமனம் அதரசுத்தி செய்து தொடுமிடம் தொட்டுத் திருமுறை முதலிய தோத்திரங்கள் ஓதுக.

33. பிரதக்ஷண நமஸ்காரம்

திக்பால மந்திரங்களை உச்சரித்து மூன்று முறை ஆன்மப் பிரதக்ஷணம் செய்து வடக்கு நோக்கி சிவமூல மந்திரம் உச்சரித்து நமஸ்காரம செய்க. பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்து இருக்குமிடத்தில் நீர்தெளித்து அதனைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு நீரைக் கால் படாத இடத்தில் விட்டு விடுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

போஜன விதி

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் ஆறகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

திருச்சிற்றம்பலம்

என்னும் தேவாரத் திருப்பாடலை ஓதிப் பட் அந்த அஸ்த்ர மந்திரம் உச்சரித்துத் திவ்ய முத்திரையால் அன்னம், கறிகளின்மேல் நீர் தெளித்து ஒம் ஹாம் ம்ருத்யுஞ்ஜயாய வௌஷட் என்ற மந்திரத்தை ஏழுமுறை ஜபித்து ஸ்வாஹாந்தசிவ மூல மந்திரத்தாலும் குரு மூல மந்திரத்தாலும் நிவேதனம் செய்க. பின்னர் வலது பக்கத்தில் பூமியிற் சிறிது அன்னம்வைத்து ஒம் நாக[3] கூர்மக்ரகர தே[3]தத்த தனஞ்சயேப்[4]ய உபப் ப்ராணவாயுப்[4]ய ஸ்வாஹா என்று சிறிது ஜலத்தை எடுத்துக் கீழே விட்டு எஞ்சிய ஜலத்தை அமிர்தோபஸ் தரணமசி என்று ஆசமனம் செய்து சிவமூல மந்திரத்தைச் சிந்தித்துப் போஜனம் செய்க. போஜன முடிவில் சிறிது ஜலம் எடுத்து அமிர்தாபிதானமசி என்று உத்தரா போஜனம் செய்து கையலம்பித் திருநீறு அணிந்து கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மந்திரங்கள்

சப்தகோடி மகா மந்திரங்களும் அவற்றின் பொதுப் பொருள்களும்

1 நம : = நமஸ்கரித்தல்

2 ஸ்வாஹா = அழைத்தல்

3 ஸ்வ'தா = கொடுக்கல்

4 வஷட் = விடுதல்

5 வௌஷட் = அசைவின்றி இருத்தல்

6 ஹீம் = கட்டல், சலனப்படல்

7 பட் = படுத்தல், அழித்தல்

இவற்றின் சிறப்புப் பொருள்களை ஆசாரியர் வாயிலாக அறிந்து கொள்க.

மந்திரக் குறிப்புக்களின் விளக்கங்கள்

1 நமாந்த அஸ்த்ர மந்திரம் = நம: என்பதை இருதியிற் கொண்ட அஸ்த்ர மந்திரம்.

உதாரணம் = ஒம்ஹ: அஸ்த்ராய நம :

2 ஸ்வாஹாந்த ஹ்ருதய மந்திரம்.

உ -ம் = ஒம் ஹாம் ஹ்ருதயாய ஸ்வாஹா.

3 ஸ்வதாந்த கணபதி மூல மந்திரம்

உ -ம் = ஒம் கம் கணபதயே ஸ்வதா

4 வஷடந்த சிகா மந்திரம்

உ -ம் = ஒம் ஹளம் சிகாயை வஷட்

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

5 வெளஷடந்த கவச மந்திரம்

உ -ம் = ஒம் ஹைம் கவசாய வெளஷட்

6 ஹும் அந்த அஸ்த்ர மந்திரம்

உ -ம் = ஒம் ஹ: அஸ்த்ராய ஹும்

7 பட் அந்த அஸ்த்ர மந்திரம்

உ -ம் = ஒம் ஹ: அஸ்த்ராய பட்

இந்நூலின் விதிப்பகுதியில் அந்தம் குறிப்பிடப்பெறாத மந்திரங்களை நமாந்த மந்திரங்களாகக் கொள்க.

கணபதி மூல மந்திரம்

ஒம் க^{3}ம் க ணபதயே நம:

குரு மூல மந்திரம்

ஒம் கு^{3}ம் குருப்^{4}யோ நம:

அஸ்த்ர காயத்ரி மந்திரம்

ஒம் சிவாஸ்த்ராய வித்^{3} மஹே காலாநலாய தீ^{4}

மஹி தந்நோ அஸ்த்ர ப்ரசோத ^{3} யாத்

ஆசமன மந்திரங்கள்

1 ஒம் ஹாம் ஆத்ம தத்வாய ஸ்வதா^{4}

2 ஒம் ஹீம் வித்^{3}யா தத்வாயா ஸ்வத^{4}

3 ஒம் ஹும் சிவ தத்வாய ஸ்வதா^{4}

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

சிவ மூல மந்திரம்

(ஆசாரியர் வாயிலாக அறியத் தக்கது)

கலா மந்திரங்கள்

1 ஓம் ஹ்லாம் நிவ்ருத்தி கலாயை நம :

2 ஓம் ஹ்வீம் ப்ரதிஷ்டா[2]கலாயை நம :

3 ஓம் ஹ்ரூம் வித்[3]யா கலாயை நம :

4 ஓம் ஹயைம் சாந்தி கலாயை நம :

5 ஓம் ஹௌளம் சாந்த்யாதீத கலாயை நம :

சம்ஹிதா மந்திரங்கள்

1 ஓம் ஹோம் ஈசான மூர்தா ய நம :

2 ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம :

3 ஓம் ஹும் அகோ[4]ர ஹ்ருத[3]யாய நம :

4 ஓம் ஹிம் வாமதே வகு[3]ஹ்யாய நம :

5 ஓம் ஹம் சத்[3]யோ ஜாத மூர்த்தயே நம :

இவ்வைந்தும் பஞ்சப் பிரம மந்திரங்கள்

6 ஓம் ஹாம் ஹ்ருத[3]யாய நம :

7 ஓம் ஹீம் சிரஸே நம :

8 ஓம் ஹும் சிகா யை நம :

9 ஓம் ஹைம் கவசாய நம :

10 ஓம் ஹௌளம் நேத்ரேப்[4]யோ நம :

11 ஓம் ஹ : அஸ்த்ராய நம :

இவ்வாறும் ஷடங்க மந்திரங்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

சக்தி மூல மந்திரம்

ஓம் ஹௌளம் சக்தயே நம:

சிவாசன மந்திரம்

ஓம் ஹாம் சிவாசனாய நம:

சிவமூர்த்தி மந்திரம்

ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம:

சந்தியாதேவி மூல மந்திரங்கள்

1 ஓம் ஹாம்ப் ராம்யை நம:

2 ஓம் ஹாம் வைஷ்ணவ்யை நம:

3 ஓம் ஹாம் ரௌத்[3]ர்யை நம:

4 ஓம் ஹாம் பராசக்த்யை நம:

சிவகாயத்ரி மந்திரம்

ஓம் ஹாம் தந் மஹேசாய வித்[3]மஹே வாக்[3]
விசுதா[4]ய தீ[4] மஹி தந்நோ சிவ ப்ரசோத[3] யாத்

தர்ப்பண மந்திரங்கள்

1 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ மந்த்ரேப்[4]யோ ஸ்வாஹா

2 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ தே வேப் யோ ஸ்வாஹா

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

3 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ ருஷிப்[4]யோ நம:
4 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ மனுஷ்யேப்[4]யோ வஷட்
5 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ பூதேப்[4]யோ வௌஷட்
6 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ பிதுர்ப்[4]யோஸ்வதா[4]
7 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ ஞாதிப்[4]யோஸ்வதா[4]
8 ஓம் ஹாம் சர்வேப்[4]யோ ஆசார்யேப்[4]யோ ஸ்வதா

மூலமந்திரங்கள்

1 ஓம் ஸாம் சரவணப[3]வாய நம:
2 ஓம் ஹ்ரீம் உமா தே[3]வ்யை நம:
3 ஓம் ஹாம் நந்தினே நம:
4 ஓம் ஹாம் மஹா காளாய நம:
5 ஓம் ஹாம் ப் ருங்கி[3]ணே நம:
6 ஓம் ஹாம் வ்ருஷபா ய நம:
7 ஓம் ஹாம்சண்டாய நம:

சிவசூரிய மூலமந்திரம்

ஓம் ஹ்ராம் ஹ்ரீம்ஸ: சிவ சூர்யாய நம:

திக் பால மந்திரங்கள்

1 ஓம் ஹாம் இந்த்[3]ராய நம:
2 ஓம் ஹாம் அக்[3]நயே நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

3 ஓம் ஹாம் யமாய நம:

4 ஓம் ஹாம் நிருதயே நம:

5 ஓம் ஹாம் வருணாய நம:

6 ஓம் ஹாம் வாயவே நம:

7 ஓம் ஹாம் குபேராய நம:

8 ஓம் ஹாம் ஈசாநாய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தியானங்கள்

கணபதி

சுந்தரஞ்சேர் சுமுகனா தாரசத்தி மடிமேற்
றோன்றுவன்பஞ் சானனமீ ரைந்துகையுந் துலங்கும்
நந்தலிலா மணிமகுடஞ் சூர்ப்பமுறுங் கன்ன
நண்ணுமுகந் தொறுமுக்க ணற்கரங்க டோறும்
கந்தமுறுங் கமுகினுறும் பாளையுநெற் கதிருங்
கழைவில்பஞ்சமலர்ப்பாணங்கதிர்வாள்வேல்கண்டை
இந்திரனா யுதந்துதிக்கை தொடுமிரத்ன கலச
மெழில்செறிமோ தகங்கோடு மேந்தியிடர்
கெடுப்பான்

அஸ்த்ர மூர்த்தி

பவளநிறம் பஞ்சா ननம்பாணி பத்தும்
பகர்வதனந்தொறுமுக்கண் பணிமணிசேர் முடியும்
இவளவென வொளிமதியா வெழின்மணிகுண்டலக்கா
திருட்களம்பா சாங்குசம்வா ளிலங்குதிரி சூலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

உவளஞ்சேர் கஞ்சமல ருயர்கண்டை யாக
மூணுறுசக் கரம்வரத முள்ளொளிசே ரபயந்
துவளுமிமில் சேர்விடைமேற் றுலங்கியபூண் செறியத்
தோன்றுவனஸ் திரமூர்த்தி யஞ்ஞானந் துரந்தே.

நிவ்ருத்தி கலை

உருகியபொன் னெனவொளிருந் திருவுருவானனங்க
ளொருநான்கும் பிறைமருவு முயர்சடில முடியுந்
திருவுருவங் கரதலங்க ளொருநான்குந் திகழுஞ்
சினக்குலிசமபயமிடஞ் சேர்ந்தவலக்கரத்திற்
பெருகொளிசேர் செபவடமும் பெருத்தெழுமுண்டகமும்
பேசரிய மணிப்பூணும் பிறங்கியநூன் மார்பு
நிருமலமா கியநிவிர்த்தி கலைமருவி யிருந்த
நின்மலனை நினைக்கவினை நீறுநீ றுறுமே

பிரதிஷ்டா கலை

தெளிபடிகத் திருவுருவோ ரானனநாற் கரத்திற்
சிறந்திடும்பா சம்வரதந்திகழுமிடக்கரத்தில்
ஒளிசெறியுஞ் செபவடமு முற்றெழுமுண் டகமு
முயர்புரிநூன் மணியிழைத்த வும்பரெனும்
பணியும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

பளிதமுறுஞ் சந்தனகத் தூரியுறும் புயமும்
பவளநிறஞ் செறிந்திடும்பூம் பட்டுமுடை வாளும்
அளிசெறிகற் பகமாலை யணிந்துபிர திட்டை
யாயகலைப் பொருளையுள்ள வகன்றிடுமாணவமே.

வித்யா கலை

தீதிலிந் திரகோபத் திருவுருவந் திலகஞ்
செறிந்தமுக மொருமூன்றுந் திண்புயங்கணான்கும்
போதியலுங் கரதலத்தில் வேல்வரத மிடப்பாற்
பொருவரியசெபவடமும் புண்டரிக மிலங்கப்
பாதிமதிச் சடைமுடியும் பண்பொழிசே ரதளப்
பணிப்பூணங் கதமிலங்கப் பரந்துநற வொழுகுஞ்
சாதிமலர்த் தொடையணிந்து வித்தைதனிலமர்ந்த
தாணுவையுன்னிடத்தயங்குந் தற்பரத்தைச்
சார்வார்.

சாந்தி கலை

எள்ளலிலா முகநான்கு மஞ்சனநேர்வடிவு
மிசைப்பரிய பெருவலியு மெழிற்கரங்கணான்கிற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

றெள்ளியசீர்ச் செபவடமும் வரதமிடப் பாலிற்
சேர்ந்திலங்கும் பதாகையெழிற் செங்கமல மலரும்
புள்ளுலவுங் கற்பகத்தின் மாலையுடன் பொன்னார்
புரிநூலும் பொலன்மணிசேர் பூடணமும் பொலிய
வெள்ளமுறு சடிலமுமாய்ச் சாந்திகலை மருவும்
வித்தகனை நினைக்கவருள் வீடுறுவர் விரைந்தே

சாந்தியாதீத கலை

தன்பளிங்கு நிறமெழில்கள் சார்ந்தமுக மைந்துந்
தடவரைநேர் புயநான்கிற் றயங்குசெபமாலை
விண்களிப்போர்க் கருள்வரதம் வலப்பால்மற்றிடப்பால்
விசயமுறும் பாசமும்வெண் டாமரையின் மலருங்
கண்களிகூர்ந் திடுதரள மாலையுப வீதங்
கற்பகமா லையிலங்கக் காதணிகுண் டலமு
மண்களிக்க வருஞ்சாந்த்யா தீ தகலா மயமாய்
வந்தவுருத் திரனையுன்ன வல்வினைமாய்ந்திடுமே

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

விபூதி ருத்திரர்

மூரலுறு மகமூன்று முகந்தொறுமுக் கண்ணு
மூன்றுகர மூன்றுபத முகையவிழ் முண்டகம்
போல்
வீரமலி திரிசூலந் துடியபயங் காதில்
வெண்குழைவெண் டலைமாலைவிற்புலித்தோ
லுடையுங்
கோரமலி விழி சுழலக் கோடீரந் தயங்கக்
கோடியிர வியினொளியாய்க் குஞ்சிதபா தனுமாய்
வாரமுறும் வெண்ணீற்றி லமர்ந்தவனைப் பணிந்தே
மன்னு திரு நீறிடவே யாணவமா சறுமே.

பிராமி தியானம்

இனியிதத் துடுவிளங்கும் பிராதக் காலையினி
லேகினவா கனபதுமா சனவாலைப் பருவப்
புனிதவுப வீதபிரா மியைச்சிவந்த வடிவிற்
பூடனரத் தாம்பரையாய்ச் சடையுமுடையவளாய்
மனியசிருக் கக்கவடம் வலமிடந்தண் டங்க
மண்டலங்கை நான்குமுக நான்கிலிரு நான்காம்
குனிபுருவத் திருவிழியும் உடையவளாய்ச் சத்வ
குணத்தினளாய்ச் சகலகன்ம சாட்சிணியாய்க்
குறித்தே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

வைணவி தியானம்

குறிகரும சாட்சிணியாய் ராசதையாய்ப் புள்ளூர்
கோகனதா சனையான தருணவை ணவியை
நெறிதருசுக் கிலநிறமுஞ் சுக்கிலவத் திரமு
நிறைபணியு முந்நூலுந் துளபமா லிகையு
மறிவிழிக ளிரண்டுடைய திருவதன மொன்றும்
வலம்புரிச்சக் கரம்வாமந் தெக்கணந்தண்டபயம்
பொறையுடைய நாற்கரமு முடையவளா யிரண்டு
புருவநடு நினைந்துமத் தியானநே ரத்தே.

ரௌத்திரி தியானம்

நேரிடப வாகனபத் மாசனருத் திரியை
நீனிறயெள வனஞ்சற்றே திரும்புதா மதையா
யேர்பெருகு கரநான்கிற் சூலமக்கம் வலத்து
மிடத்தபயங் கதிர்வேறாங் கிளம்பிறைவே
ணியளாய்ப்
பார்வையொரு மூன்றிலகு வதனமொன்றுள் ளவளாய்ப்
பலகரும சாட்சிணியா யத்தாத்த மனத்திற்
சார்பிரம ரந்திரத்தி னினைந்து மூவரையுந்
தரித்தகிருஷ்ணா சனருமாய் நினைவர்சமயிகளே

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

பராசத்தி தியானம்

ஆணவம் அகன்ற சுத்த அறிவலால் உருவமில்லாத்
தாணுவி னகற லின்றிச் சகத்தினைந் தொழிலு மாற்றிக்
கோணுமனைத்து நீக்கிக் குறுகிய வுயிர்கட் கெல்லாம்
பூணவ வின்ப நல்கும் பூரணிக் கன்பு செய்வாம்.

சதாசிவ தியானம்

உச்சிமுக மீசான மொளிதெளிய பளிங்கே
யுத்தரபூ ருவதிசையை நோக்கியுறு முகந்தே
நிச்சயித்த முகத்தின் கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகந் தற்புருடங் கோங்கலர்போனிறமே
யச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள
மவிழ்தாடி வலத்தாளிற் றென்னோக்கி யமருஞ்
செச்சைநிறத் தெரிவைமுக மிடத்தோண்மேல் வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்பால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

திருவுருவந் தெளிபளிங்கு சடாமகுடத் திதழி
சிறுபுறையு மீவைந்து திருநயனம்வலப்பாற்
கரதலத்திற் சத்தியப யஞ்சூல நீண்ட
கட்டங்கந் தமருகமு மற்றையிடக் கரத்தின்
வரமுமா துளங்கபலம் போகிசெப மாலை
மணமலிநீ லோற்பலமு முடையர்வயதீரெட்
டுறுவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமா தனந்தா
னுறவிருப்பர் சதாசிவந்தத் துவத்தவிசி னுகந்தே

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தோத்திரங்கள்

திருச்சிற்றம்பலம்

தேவாரம் முதல் திருமுறை

தோடு டையசெவி யன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்
கவர்கள்வ
னேடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த
வருள் செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

இரண்டாம் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி வுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான்
றிருநீறே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

மூன்றாம் திருமுறை

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே.

- திருஞான சம்பந்த சுவாமிகள்

நான்காம் திருமுறை

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியே
னேற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதுந்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
வாற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

ஐந்தாம் திருமுறை

ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மாற் பேறரே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

ஆறாம் திருமுறை

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன்பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளிதெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங் கோடிகாவு
முல்லைப் புறவ முருகன்பூண்டி
முழையூர் பழையாறை சத்திமுற்றங்
கல்லிற் றிகழ்சீரார் காளத்தியுங்
கயிலாய நாதனையே காணலாமே.

- திருநாவுக்கரசு சுவாமிகள்

ஏழாம் திருமுறை

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையு
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

- சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

திருவாசகம் -- எட்டாம் திருமுறை

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்
கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சய சய
போற்றியென்னுங்
கைதா நெகிழ விடேனுடை யாயென்னைக்
கண்டுகொள்ளே.

திருக்கோவையார் எட்டாம் திருமுறை

திருவளர் தாமரைசீர்வளர் காவிகள்ஈசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் - ஒல்கி அன
நடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்
றொளிர்கின்றதே.

- மாணிக்கவாசக சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

திருவிசைப்பா -- ஒன்பதாம் திருமுறை

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் நிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

- திருமாளிகைத்தோவர்

திருப்பல்லாண்டு
ஒன்பதாம் திருமுறை

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர்
போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
வன்ன நடைமட வாளுமை கோனடி யோமுக்
கருள்பிரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

ublic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

திருமந்திரம் -- பத்தாம் திருமுறை

சிவனோ டொக்குந்தெய்வந் தேடினு மில்லை
யவனோ டொப்பாரிங் கியாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

- திருமூலதேவநாயனார்

பதினொராம் திருமுறை

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே - னிறந்திகழு
மைஞ்ஞான்ற க்ண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

- காரைக்கால் அம்மையார்

திருத்தொண்டர் புராணம்
பன்னிரண்டாம் திருமுறை

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலீ வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

- சேக்கிழார் சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

அம்மையார் துதி

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத்
திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.
- உமாபதிசிவம்.

விநாயகர் துதி

கல்லால் நிழல்மலை, வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர், நல்லார் புனைவரே.
- மெய்கண்டசிவம்.

முருகப்பெருமான் துதி

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி
மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய னாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள்
போற்றி.
- கச்சியப்ப சிவாசாரியர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

சமய குரவர் துதி

பூழியர்கோன் வொப்பொழித்த புகலியர்கோன்
கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான்
அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி
- உமாபதிசிவம்.

நாயன்மார் துதி

பேயன்னபுறச்சமயப்பிணக்குநூல் வழியனைத்தும்
பிழையே யன்றி
வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த வழிதேறி யதீத
வாழ்வில்
போயண்மி அஞ்செழுத்தும் திருநீறும் கண்டிகையும்
பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு
நான்பெற் றேனால்
- காரைக்கால் அம்மையார்

சந்தான குரவர் துதி

சிவஞாந போதமருள் மெய்கண்ட தேவரிரு செந்தாள்
போற்றி
அவர்பாதமலர்தலைகொள்அருணந்தியாங்குரவர்
அடிகள்போற்றி

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

தவமாகு மறைஞான சம்பந்த வள்ளலிரு சரணம் போற்றி
பவமோய அருளுமுமா பதிசிவா சாரியர்பொற்
பதங்கள்போற்றி
- தத்புருஷ தேசிகர்.

தீட்சா குரவர் துதி

யாக்கைகொடுத் தெமையிங்கே யிவைநுகர்ந்து
வருகவென எம்சி ரத்தில்
நோக்கிருநான் குடையான்முன் பெழுதுமெழுத்
தினைஞான நோக்கம் செய்து
பூக்குமலர்க் கரத்தாலே அழித்தென்றும் சிவபோகம்
பொலியும் வண்ணம்
தீக்கைபுரிந் தாண்டருளும் ஈசான சிவகுரவன்
திருத்தாள் போற்றி
- தத்புருஷ தேசிகர்.

* அவரவர்களின் தீக்ஷா குரவர் துதிப்பாடலை இங்கே ஒதுக

1 பாத்திரசுத்தி விளக்கம்

அஸ்த்ர மந்திரம் எல்லாவற்றையும் சுத்தி செய்வது ஆதலால் அதனை உச்சரித்துப்பாத்திரத்தைக் கழுவுவதால் பாத்திரத்தின் அகம், புறம் இரண்டும் சுத்தியாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata a

2 அனுட்டானத்திற்குரிய திக்குகளின் விளக்கம்

முத்திப் பேற்றை விரும்புவோர் வடக்கு நோக்கியும், வாழ்க்கையின்பத்தை விரும்புவோர் கிழக்கு நோக்கியும் இருக்கக்கடவர். சிவபெருமான் முத்தியை அருளும் ஞானாசாரிய மூர்த்தியாய் இருக்கும் போது தெற்கு நோக்கி இருப்பார். அவரது ஐந்து திருமுகங்களில் பாச நீக்கம் செய்யும் அகோர முகம் தெற்கு நோக்கியது. அந்தத் திருமுகத்தை எதிர் கொண்டு அநுட்டான ஜபம் செய்வோர் பாச நீக்கமும, சிவப்பேறும் பெறுவர். சிவபெருமான் வாழ்க்கையின்பத்தை வழங்கும் போக மூர்த்தியாய் எழுந்தருளியுள்ள சூரிய மண்டலம் கிழக்கில் இருப்பதால் அந்த மூர்த்தியை எதிர் கொண்டு அநுட்டான ஜபம் செய்வோர் வாழ்க்கையின்பத்தைப் பெறுவர்.

3 பூமி சுத்தி விளக்கம்

ஹ்ருதய மந்திரம் நிறைவு செய்வதாதலால் அதனை உச்சரித்து நீர் நிரப்புதலும், அஸ்த்ர மந்திரம் சுத்தி செய்வதாதலால் அதனை உச்சரித்துச் சுத்தி செய்தலும் முறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

4 கணபதி குரு வணக்க விளக்கம்

கணபதி முதற் கடவுளாதலாலும், விக்னங்களுக்குத் தலைவராயிருந்து தன்னை நினையாதவர்களுக்கு அவற்றை ஆக்கி மறக் கருணையையும் நினைப்பவர்களுக்கு அவற்றை நீக்கி அறக்கருணையையும் செய்பவராதலாலும், செய்யும் கிரியை குறைவற நிறைவேறுதற் பொருட்டும் கணபதி வணக்கம் செய்யப் பெறுவதாகும்.

கு = அஞ்ஞானம், ரு --- நீக்குபவர். குரு --- அஞ்ஞானத்தை நீக்குபவர். மலநீக்கமும் சிவத்துவ விளக்கமும் உண்டாதற் பொருட்டுக் குரு வணக்கம் செய்தல் முறை.

5 ஜல சுத்தி விளக்கம்

நிரீக்ஷணம் = பார்த்தல்., இது, நீரிலுள்ள குற்றத்தைச் சூரியனாகிய இச்சா சக்தி சொரூப வலக்கண்ணால் உலர்த்தியதாகவும், அக்கினியாகிய ஞான சத்தி சொரூப நெற்றிக்கண்ணால் எரித்த தாகவும், சந்திரனாகிய கிரியா சத்தி சொரூப இடக்கண்ணால் அமுதம் கொண்டு நனைத்ததாகவும் பாவிக்கப் பெறுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

புரோக்ஷணம் = தெளித்தல் ; இது, நீர்தூயதாதற் பொருட்டுப் புருவ நடுவில் விளங்கும் வெண்மையான விந்து மண்டலத்திலுள்ள அமுதத்தை வாங்கி நீரில் தெளிப்பதாகப் பாவிக்கப்பெறுவது.

தாடனம் = தட்டுதல் கல்லை அடிக்கும்போது அதில் நிறைந்து மறைந்திருக்கும் தீ, பொறிவடிவாய் வெளிப்படுவது போல எல்லாப் பொருள்களிலும் நிறைந்து மறைந்திருக்கும் சிவசக்தியின் விளக்கம் தூய்மை அடைந்த நீரில் உண்டாதற் பொருட்டு இது செய்யப் பெறுவது. அஸ்த்ர மந்திரம் தீமை நீக்கத்தையும், நன்மை ஆக்கத்தையும் செய்வது.

அப்யுக்ஷணம் = மூடுதல் ; நீரில் தோன்றிய சிவசக்தியின் விளக்கம் அதனைவிட்டு நீங்காது நிற்றற் பொருட்டுச் செய்யப்படுவது. கவச மந்திரம் காக்கும் திறமுடையது.

தாளத்திரயம் = மும்முறை கைகொட்டுதல் ; இது சிவசக்தியின் விளக்கத்திற்குத் தடை செய்ய வரும் அசுரர் முதலியோரை எட்டுத் திக்குகளிலும் ஓட்டுதற் பொருட்டுச் செய்யப் பெறுவது.

திக்பந்தனம் = திசைகளைக் கட்டுதல் ; இது சிவசக்தியின் விளக்கத்திற்குத் தடை செய்ய வரும் அசுரர் முதலியோரை எட்டுத் திக்குகளிலும் வாரா தொழியும்படி

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

சொடித்துச்சுடர் உண்டாக்கிக் காவல் செய்வது.

அவகுண்டனம் = கீழ்நோக்கிச் சுற்றுதல், இது சிவசக்தி விளங்குகிற இடத்தைச் சூழ மூன்று மதில்களும், மூன்று அகழிகளும் உண்டானதாகப் பாவித்துச் செய்யப் பெறுவது.

அமிர்தீகரணம் = அமுத வடிவாக்குதல்; காமதேனுவின் பால் அமுத மயமானதாதலின் அதன் முலைக்காம்புகளைக் குறிக்கும் தேனு முத்திரைகாட்டி நீரில் அமுதம் பொழிந்ததாகப் பாவித்து இது செய்யப் பெறுவது.

6 ஜலப் புரோக்ஷண விளக்கம்

கன்ம சரீரம் சுத்தியாதற் பொருட்டு எல்லாவற்றையும் சுட்டெரிக்கும் வல்லமையை உடைய அஸ்த்ர மந்திரத்தால் புரோக்ஷித்துக் கொள்ளல் முறை.

7 அஸ்த்ர சந்தியோ பாசன விளக்கம்

சம் -- தியா -- உபாசனம் = சந்தி யாபாசனம். செவ்வையாகத் தியானித்து உபாசித்தல்.
தர்ப்பணம் = மகிழ்வித்தல். எங்கும் நிறைந்தவராயும் எல்லாவற்றையும் கடந்தவராயும் உள்ள சிவபெருமான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்தற் பொருட்டுத் தமது பெருங் கருணையால் ஞாயிறு முதலிய அட்ட மூர்த்தங்களாகவும் விளங்குகின்றார். ஞாயிறு மணடலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தியானித்துப்பாவங்களை அழிக்கும் அஸ்த்ர மந்திரம் கொண்டு அவருக்குத் தர்ப்பணம் செய்வதால் நமது கன்ம மலம் நீங்கும்.

8 ஆசமன விளக்கம்

ஆசமனம் = நீர் பருகுதல், இது மாயை மல சுத்தியின் பொருட்டுச் செய்யப்படுவது. மாயாமலம், பிறவிகள் தோறும் உயிர்கள் செய்த வினைகளுக்குத் தங்குமிடங்களாயிருக்கும். ஆன்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவ தத்துவம் ஆகிய மூன்று தத்துவங்களாக விரிந்து உயிர்களோடு தொடர்புகொள்ளும், ஸ்வதா என்னும் மந்திரத்தைத் தத்துவங்களுடன் கூட்டி உச்சரிப்பதால் அவற்றின் அதி தெய்வங்களாகிய பிரம, விஷ்ணு, உருத்திரர்கள் வெளிப்பட்டு அவ்வத் தத்துவங்களைச் சுத்தி செய்து அருளுவர். மேலும் இருக்கு, யஜுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களும் இச்செயலுக்கு மகிழும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

9 அதர சுத்தி விளக்கம்

உதடுகள் இரண்டையும் வலமிடமாகத் துடைப்பதனால் அதர்வண வேதமும் இதிகாசமும் மகிழ்வெய்தும், கீழ் நோக்கித் துடைப்பதனால் விநாயகர் மகிழ் வெய்துவர். அதர சுத்தி உறுப்புக்களின் அதிதெய்வங்கள் ; மேல் உதடு -- எட்டு நாகங்கள் ; கீழுதடு -- இதிகாசம், வாய் -- வேதம்

10 தொடுமிடம் விளக்கம்

இது உடம்பிலிலுள்ள உறுப்புகளைச் சுத்தி செய்தற் பொருட்டும் அவற்றின் அதிதெய்வங்களை மகிழ்வித்தற் பொருட்டும் செய்யப் பெறுவது. சுத்த சிவத்தை அதி தெய்வமாகவுடைய வலக்கைப் பெருவிரலும், அமுத கலையை அதி தெய்வமாக உடைய அணிவிரலும் கூடிய திவ்ய முத்திராயால் தொடுவது அவ்வுறுப்புக்களின் அதி தெய்வங்களுக்குப் பெரு மகிழ்ச்சியை ஊட்டும். முகம் தொடுமிடம் ஆகும்போது புருவநடு, கீழுதட்டின் கீழுள்ள மோவாய் ஆகிய இரண்டில் ஒன்றாகக் கொள்ளப் பெறும். தொடுமிட உறுப்புக்களின் அதி தெய்வங்கள்- முகம் -- கங்கை, வலது இடது மூக்கு -- பிராணன், வலக்கண் --சூரியன், இடக்கண் --சந்திரன், வலது இடது காது -- திக்குப் பாலகர்கள், தொப்பூழ் -- பிரமன், மார்பு --உருத்திரன், வலது இடது தோள் – அசுவினி தேவர்கள், சிரசு -- திருமால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

11 கரசுத்தி விளக்கம்

இது பசு கரணங்களாகிய கைகள் சுத்தியாதற் பொருட்டுச் செய்யப் பெறுவது. அஸ்த்ர மந்திரம் உச்சரித்து இயல்பாகவே துயதாயிருக்கின்ற வலக்கரத்தால் இடக்கரத்தைத் துடைப்பதாலும், தூய்மை பெற்ற இடக்கரத்தால் வலக்கரத்தைத் துடைப்பதாலும் இருகைகளும் சுத்தி அடையும். வலது உள்ளங்கையை விட இடது உள்ளங்கை தூய்மைக்குறைவு உடையதாதலின் அதனை இரு முறை துடைத்தல் வேண்டும்.

12 விபூதி சுத்தி விளக்கம்

விபூதி பராசக்தி வடிவமானது. கலா மந்திரங்களால் சுத்தி செய்வது அத்துவாக்கள் சுத்தியடையதற்பொருட் டாகும். அத்துவாக்கள் கலை, தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரம் என ஆறாம். மந்திரம் பதத்தினுள்ளும், பதம் வன்னத்தினுள்ளும், வன்னம் புவனத்தினுள்ளும், புவனம் தத்துவத்தினுள்ளும் தத்துவம் கலையினுள்ளும் அடங்கியிருக்கும். கலையைச் சுத்தி செய்யவே ஒன்றுளொன்றாக அடக்கியிருக்கும். மற்ற அத்துவாக்களும் சுத்தியாவனவாம். சம்ஹிதா மந்திரம் கொண்டு அபிமந்திரிப்பதால் ஐந்து கலைகளிலும் நிறைந்திருக்கும் சிவசக்தி விளக்கம் பெறும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

சம்ஹிதா மந்திரங்கள் சிவசத்தியின் வடிவங்களாயிருப்பவை. நிருதி மூலை அசுரர் முதலிய கொடியவர் வாழும் பகுதி. அபிமந்திரித்தல் -- மந்திர ஆற்றல் பொருந்தும்படி செய்தல். நிருதி மூலை என்பது தென் மெற்குத் திசையாகும்.

13 அமல ஸ்நான விளக்கம்

மந்திர சக்தியுடைய திருநீற்றால் அவிஷேகித்துக் கொள்ளுவது, உடம்பு முழுவதிலுமுள்ள இடையூறுகள் நீங்கும் பொருட்டாகும்.

14 பஸ்ம ஸ்நான விளக்கம்

திரிபுண்டரம் :-- மூன்று ரேகைகள். ரேகைகள் இடையறாமலும், ஒரே அகலமாயும், ஒன்றுக்கொன்று இடைவெளி உள்ளனவாயும் இருத்தல் வேண்டும். மூன்று ரேகைகளாகத் தரிப்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் எரித்து நீறாக்கித் தரிப்பதாகும். நெற்றி, மார்பு, தோள், ஆகிய இடங்களில் ஆறு அங்குல நீளமும் பிற இடங்களில் ஒரு அங்குல நீளமுமாகத் திரிபுண்டரம் தரித்தல் வேண்டும். சிரசிலும் நெற்றியிலும் மும்மூன்று முறையும், பிற இடங்களில் ஒவ்வொரு முறையும் பூசுதல் வேண்டும், இடையிடையே சுத்தியின் பொருட்டு அஸ்த்ர மந்திரத்தை நினைப்பது முறை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

பஸ்ம ஸ்நானமாகிய விபூதி தரித்தலால் அவ்வவ்விடங்களுக்குரிய அதி தெய்வங்கள் மகிழ்ந்து மல நீக்கம் செய்தருளுவார்கள்.

அதிதெய்வங்கள் :-- உச்சி -- சதாசிவன், நெற்றி -- மகேசுவரன், மார்பு -- உருத்திரன், தொப்பூழ் -- திருமால், வலது இடது முழந்தாள் -- பிரமன், வலது தோள் -- வாமை, இடதுதோள் -- சேட்டை, வலது முழங்கை -- ரௌத்ரி, இடது முழங்கை -- காளி, வலது மணிக்கட்டு -- கலவிகரணி, இடது மணிக்கட்டு -- பலவிகரணி, வலது விலா -- பலப்ரமதனி, இடது விலா -- சர்வபூததமனி, முதுகு, கழுத்து -- மனோன்மணி.

15 மந்திர ஸ்நான விளக்கம்

இதனால் ஆணவ மலச்சேட்டை ஒடுங்கும், கன்மமாயா மலங்களும் பற்றற ஒழியும்.

16 மானத ஸ்நான விளக்கம்

முன்பு ஆசமனத்தால் எய்திய தத்துவசுத்தி நிலை பெறுதற் பொருட்டு மீண்டும் ஆசமனம் முதலியன செய்தல் வேண்டும், மும் மலங்களும் நீங்கி உயிரும் உடம்பும் தூயதாதற் பொருட்டு மானத ஸ்நானம் செய்யப் பெறுவதாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

17 கரநியாச விளக்கம்

கரம் – கை. நியாசம் – பதித்தல் – கரத்திற் சிவத்தைப் பதித்தல். பசு ஞானத்தை ஒழித்துப் பதி ஞானத்தை விளங்கச் செய்வது சிவாஸ்த்ர மந்திரம். அதனை உச்சரித்துக் கைகளைத் துடைப்பதனால் கைகளில் உள்ள அசுத்தங்கள் சிவாஸ்த்ரத்திலுள்ள நெருப்பினால் தகிக்கப்படும். கைகளைப் புருவ நடுவரை உயர்த்துவது அங்குள்ள அமுதத்தால் கைகள் தூய்மை பெறுதற்காகும். சிவசத்தி வடிவினதாகிய இரண்டு கைகளையும் விரிக்கும் பொழுது பெருவிரல் ஒழிந்த எட்டு விரல்களும் எட்டிதழ்த் தாமரை வடிவினதாகவும், நடுவில் உள் மடங்கியிருக்கும் பெருவிரல் அத்தாமரையின் பொகுட்டு வடிவினதாகவும் பாவிக்கப்பெறும். அதில் சிவபெருமானுக்கு ஆசனம் கற்பித்து அவரை எழுந்தருளச் செய்து பஞ்சப் பிரம மந்திரங்களால் அவரது ஐந்து திருமுகங்களையும், வித்யா தேக மந்திரத்தால் ஞான தேகத்தையும், நேத்திர மந்திரத்தால் முக்கண்களையும்,அங்கமந்திரங்களால்உறுப்புக்களையும் அவருக்குக் கற்பித்து அவரைத் தியானித்து வணங்குவது கரநியாசத்தின் குறிப்பாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

18 அங்க நியாச விளக்கம்

அங்கம் -- உடம்பு. நியாசம் -- பதித்தல் -- உடம்பிற் சிவத்தைப் பதித்தல். அஸ்த்ர மந்திரத்தால் பாதம் முதல் சிரசு வரை துடைப்பதால் சரீரத்திலுள்ள அசுத்தங்கள் தகிக்கப் படும். புருவ நடுவுக்கு நேராகச் செய்யும் அஞ்சலி அங்குள்ள அமுதப் பிரவாகத்தினால் சரீரத்தைச் சுத்தி செய்யும். பஞ்சப் பிரம மந்திரங்கள் முதலியவற்றால் உடம்பில் சிவத்தை நியாசம் செய்வதற்கு உரிய விளக்கம் முன்பு கரநியாசத்தில் கூறப் பெற்றதேயாம்.

மேற் கூறிய கரநியாசம், அங்கநியாசம் ஆகிய இரண்டும் சேர்ந்து சகளீகரணம் என்று பெயர் பெறும். சகளம் – உருவம், கரணம் -- செய்தல். கரநியாசத்திற்கு முன்பு செய்த கிரியைகளினால் பாசத் தொடர்பு நீங்கப் பெற்ற தேகத்தில் சிவத்துவம் உண்டாதற் பொருட்டுச் செய்யப் பெறுவது சகளீகரணம், சிவத்தைக் குறிக்துச் செய்யப்படும் எல்லாச் செயல்களையும் மாயைத் தொடர்பு ஒழிந்து சிவத்தொடர்பு பெற்ற பொருள்களைக் கொண்டே செய்ய வேண்டுமாதலின் சிவத்தொடர்பை உண்டாக்கும் சகளீகரணம் இல்லாது சிவத்தைக் குறித்த எந்தக் கிரியைகளையும் செய்யலாகாது. கரநியாசத்தில் கைகளும், சிவமும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

இரண்டற ஒன்றியுருப்பதாகவும் அங்கநியாசத்தில் தேகமும் சிவமும் இரண்டற ஒன்றியுருப்பதாகவும் பாவிப்பது முறை.

19 பிராணாயாம விளக்கம்

பிராணன் -- பிராண வாயு, அயாமம் – தடுத்தல். பிராண வாயுவைத் தடுத்துப் போக்கு வரவு செய்தல். மனமாகிய மதயானை பிராண வாயு என்னும் சங்கிலியால் தொடக்குண்டு திரிவதாதலால்அம்மனத்தை அடக்க முயல்பவர்கள் பிராணாயாமம் செய்வது முறை. இது பூரகம், கும்பகம், ரேசகம் என்னும் மூன்று பிரிவுகளையுடையது. பூரகம், வெளியே உள்ள சுத்தவாயுவை இடது நாசியிலுள்ள சந்திர கலையாகிய இடைகலை நாடியினால் வாங்கி உள்ளே நிரப்புவது. கும்பகம், அங்ஙனம் நிரப்பிய வாயுவை நடுவிலுள்ள சுழுமுனா நாடியிற் சென்று நிறையும்படி உள்ளே நிறுத்துவது. ரேசகம், உள்ளே நிறுத்திய வாயுவை வலது நாசியிலுள்ள சூரிய கலையாகிய பிங்கலை நாடியினால் வெளியில் விடுவது.

அஸ்த்ர மந்திரத்தால் வாயுவை இழுத்தலும் விடுதலும் நாடி தோதனையாகும். பிராணாயாமத்தால் வலது கையில் உண்டாகிய அசுத்தம் வலதுகாதை மூடுவதால் நீங்கும். வலதுகாதுக்கு அதிதெய்வம் அக்னி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

20 சிவ தீர்த்த கரண விளக்கம்

சிவதீர்த்த கரணம் -- சிவ தீர்த்தம் செய்தல். பிராணாயாமத்தினால் புருவ நடுவாகிய விந்துத்தானத்தில் விளக்கம் பெற்ற ஞானாமுத விந்துவை நீரில் வைத்து அபிமந்திரத்தல் முதலிய சம்ஸ்காரங்களைச் செய்வதால் அது சிவதீர்த்தமாகும்.

21 சந்தியா தியான விளக்கம்

சம் -- செவ்வையாக, தியா – தியானித்தல், எனவே சந்தியா தியானம் என்பது செவ்வையாகத் தியானிக்கப்படும் தியானம் எனப் பொருள்படும். எல்லாச் செயல்களுக்கும் சாட்சியாய் விளங்குகிற சிவசத்தி பிராமி, வைணவி, ரௌத்ரி என மூவகைப் பட்டுக் காலை, மத்யானம், சாயுங்காலம் ஆகிய வேளைகளுக்கு ஏற்ப விளங்கி நிற்கும். பிராமி -- படைப்புச் சத்தி, வைணவி -- காப்புச்சத்தி, ரௌத்ரி --அழிப்புச்சத்தி. பகலின் தோற்ற நிலை ஒடுக்கங்களைப் புலப்படுத்துவனவாகிய காலை, மத்யானம், சாயுங்காலம் ஆகிய மூன்று வேளைகளிலும் முறையே அம் முத்தொழில்களுக்கும் உரிய சத்திகளைத் தியானித்தல் வேண்டும். இதனால் ஞான சமாதியும், முத்திப் பேறும் சித்திக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

22 மந்திராபிஷேக விளக்கம்

சிவசத்தி தியானத்தாற் பெற்ற அருட்பேற்று நிலை உறுதிப்படுவதற்கு இது செய்யப்பெறும்.

23 மார்ஜன விளக்கம்

மார்ஜனம் – சுத்தி செய்தல், சிவசத்தி விளக்கம் பெற்ற நீரைச் சிரசில் தெளித்துக் கொள்வதால் புறந்தேயுள்ள தூல சரீரத் தொடர்பு பற்றி வந்த தீவினைகள் ஒழியும்.

24 அகமர்ஷண விளக்கம்

அகம் – பாவம், மர்ஷணம் – கெடுத்தல், அகத்திலுள்ள பாவங்களையும், சூக்கும சரீரத் தொடர்பு பற்றி வந்த தீவினைகளையும் ஒழிக்கும் பொருட்டு இது செய்யப்பெறும். மூக்கருகில் நீரைப் பிடிக்கும் பொழுது அந்த நீரைச் சுத்தமானதாகவும், வெண்ணிற முள்ளதாகவும், அறவடிவினதாகவும் பாவித்தலும் உட்சென்று வெளிவரும் நீரை அசுத்தமானதாகவும், மைக்குழம்பு போல் கருநிறம் உள்ளதாகவும், பாவ வடிவினதாகவும் பாவித்தலும் வேண்டும். வலது காற பெருவிரலுக்கு அதிதெய்வம் அக்னி. நீரை வலது கால் பெருவிரலில் விடுவதால் பாவம் எரிந்து ஒழியும். புருவ நெறிப்பு – கோபத்தின் அறிகுறி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

25 ஆசமன சகளீ கரண விளக்கம்

சூக்கும சரீரத்திலுள்ள தத்துவங்கள் சுத்தியாதற் பொருட்டும் இனிச் செய்யப் போகும் தர்ப்பண கன்மத்திற்கு அங்கமாகவும் இங்கே ஆசமன சகளீகரணங்கள் செய்தல் வேண்டும்.

26 கவச வேஷ்டன விளக்கம்

கவசம் -- காப்பது, வேஷ்னம் -- சுற்றுதல், இனிச் செய்யப் போகின்ற தர்ப்பண கன்மங்களுக்கு அசுரர் முதலியோரால் இடையுறு நேராதிருத்தற் பொருட்டுத் தன்னைச்சூழ அக்னிக் கோட்டை உண்டானதாகப் பாவித்து இதனைச் செய்தல் வேண்டும்.

27 சதாசிவத் தியான விளக்கம்

சதாசிவ மூர்த்திக்கு ஆன்மா உடைமைப்பொருள் என்பதைத் தெளிந்து அவரைத் தியானிக்க ஆண்டான் அடிமைத் திறம் உறுதி பெறும்.

28 காயத்ரி ஜப விளக்கம்

காயத்ரி மந்திரங்களில் மிக மேலானது சிவ காயத்ரி. அதனை உச்சரித்துச் செய்யும் தர்ப்பணத்தால் சிவபெருமான் பெரிதும் மகிழ்வார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

29 தர்ப்பண விளக்கம்

இது முறையே சிவ சக்திகளையும், தேவர்களையும், இருடிகளையும், மானுடர்களையும், பஞ்சபூதங்களையும், பிதுர்க்களையும், மகிழ்வித்தற் பொருட்டுச் செய்யப் பெறுவதாகும். தேவதீர்த்தம் -- கைவிரல்களின் நுனிகளாலும் ஆரிட தீர்த்தம் விரல் இடை வெளிகளாலும், மானவ தீர்த்தம் சிறு விரல் மூலத்தாலும், பூத தீர்த்தம் மணிக்கட்டினாலும், பிதுர் தீர்த்தம் சுட்டுவிரல், பெருவிரல்கள் இடைவழியினாலும் கொடுக்கப் பெறுவனவாகும்.

30 தீர்த்தோப சங்கார விளக்கம்

முன்பு செய்த தத்துவ சுத்தியும், சிவ சொரூப பாவனையும் நிலை நிற்றற் பொருட்டு இங்கும் ஆசமன, சகளீகரணங்கள் செய்யப்பெறும். தீர்த்தோப சங்காரமாவது நீரிலுள்ள மந்திரங்கள் முதலியவற்றை ஒடுக்குதலாம். உபசங்காரம் – ஒடுக்குதல்

31 சூரியோபஸ்தான விளக்கம்

உயிர்களின் அறிவிச்சை செயல்கள் இறைவனது அறிவிச்சை செயல்களுக்குள்அடங்கி நிற்கும் நிலையே அவ்வுயிர்களின் இன்பப் பேற்றுக்கு மூலமாயிருப்பது. செய்யும் செயல்களைச் சிவச் செயல் எனக் கொள்ளாது தம் செயல் எனக் கொள்ளுவோர் உய்தி பெற

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

வழியில்லை. அதனால் இதுவரை செய்த அநுட்டானக் கிரியைகள் அனைத்தையும் செய்தது சிவபெருமானே எனப் பரிபூரணமாக உணர்ந்து அவரிடம் அக்கிரியைகளை ஒப்படைப்பது இதனால் நிகழுவதாகும்.

32 ஜப விளக்கம்

கணபதி குரு வணக்கம் ஆதியவற்றுக்கு முன்னரே விளக்கம் கூறப் பெற்றுள்ளது, சிவமூல மந்திரம் ஒன்றே எல்லாப் பேறுகளையும் குறைவின்றி வழங்குவது. ஆதலால் அதனை அதிகமாகக் கணிப்பதும், மற்ற மந்திரங்களை அதற்கேற்பக் கணிப்பதும் முறையாகும். அநுட்டான காலத்தில் நேர்ந்த குறைகள் நீங்கும் பொருட்டு அகோர மந்திர ஜபம் செய்தல் வேண்டும்.

108, 54, 27 உருத்திராக்க மணிகளால் ஆகிய ஜபமாலையைப் போக காமிகள் கீழ்நோக்கித் தள்ளியும், முத்தி காமிகள் மேல்நோக்கித் தள்ளியும், நாயகமணி விரல்களைக் கடவாமல் ஜபிக்க வேண்டும். மனத்தால் ஜபிப்பது மானதம் என்றும், தனக்கு மட்டும் கேட்கும்படி ஜபிப்பது உபாஞ்சு என்றும், அருகிலிருப்பவர்களுக்குக் கேட்கும்படி ஜபிப்பது வாசகம் என்றும் சொல்லப்படும் இவற்றுள் சிறந்தது மானதமே. பஞ்சாக்ஷரம் அநாதியாயுள்ளது பஞ்ச சத்திகளுக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

பஞ்ச கிருத்தியங்களுக்கும் இடமாயிருப்பது. ஆணவத்தை நீக்கித் திரோதான சத்தியைக் கடந்து ஞானத்தைத் தரிசித்துச் சிவத்தில் கலக்கச் செய்வதும் திருவைந்தெழுத்து என்பது உணரத்தக்கது.

33 பிரதக்ஷண நமஸ்கார விளக்கம்

இது சிவபெருமானுடைய திருவருளைப் பரிபூரணமாகப் பெறுவதற்காகச் செய்வது

Center for Shaiva Studies, Pondicherry Collection

lic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta a

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முத்திரைகளின் விளக்கங்கள்

1. பதாகை முத்திரை

"ஒரித் திடுகரம் உறநிமிர்த் தைவிரல்
பாரித் திணைப்பது பதாகைமுத் திரையே"

ஐந்து விரல்களையும் சேர்த்து நீட்டிக் கவிழ்ப்பது கவிழ்ந்த பதாகை நிமிர்ப்பது நிமிர்ந்த பதாகை.

2. சிகா முத்திரை

"மூன்று நடுவிரல் முட்டியாய் மடக்கி
மற்றிரு விரலையும் வயங்குற நீட்டி
நெற்றிமேற் புடைப்பது நீள்சிகா முத்திரை"

இரண்டு கைகளின் நடுவிரல்கள் மூன்றையும் முட்டியாக மடக்கி மற்ற இரு விரல்களையும் நீட்டித் தலையின் இரு புறத்திலும் புடைப்பது.

3. நமஸ்கார முத்திரை

"பெருவிரல் இரண்டும் பிணைந்திட நிமிர்ந்தே
கரமிரண் டுறினமக் காரமுத் திரையே"

இரண்டு கைகளையும் சேர்த்து இடது பெருவிரல் மேல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

வலது பெருவிரல் பொருந்துபடி கூப்புவது.

4. திவ்ய முத்திரை

"அம்மலர் சாத்தற் கனாமிகை பெருவிரல்
செம்மையிற் செறிப்பது திவ்விய முத்திரை"

பெருவிரல் அணி விரல்களைச் சேர்த்து மற்ற விரல்களை நீட்டுவது.

5. அதோ முகி முத்திரை

"தர்ச்சனி நீட்டிச் சார்பிற விரல்களை
மடக்கிக் கவிழ்ப்பது மன்னும் அதோமுகி"

சுட்டு விரலை நீட்டி மற்ற விரல்கலை மடக்கிக் கீழ் நோக்கிப் பிடிப்பது.

6. சோத்திக முத்திரை

இது கவிழ்ந்த பதாகை முத்திரையை அனுசரித்துப் பிடிப்பது.

7. கோவிடான முத்திரை

"பிடித்தகைத் தர்ச்சனி பிறங்குமத் திமைதனை
விடுத்திடு வதுகோ விடாணமுத் திரையே"

சுட்டு விரலையும் நடு விரலையும் நீட்டிச் சிறுவிரலை

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

யும் அணி விரலையும் மடக்கிப் பெருவிரலால் அழுத்திப் பிடிப்பது.

8. சோடிகா முத்திரை

"பிடித்தகைத் தர்ச்சனி பெருவிர லின்நடுத்
துடித்திடத் தெறிப்பது சோடிகா முத்திரை"

விரல்களை மடக்கிச் சுட்டு விரலால் பெருவிரல் நடுவில் விரல் துடிக்கத் தெறிப்பது.

9. அதி தீக்ஷண முத்திரை

இது அதோமுகி முத்திரையை அனுசரித்துப் பிடிப்பது.

10. தேனு முத்திரை

"இருகை கூட்டி யிடையிடை கோத்திடு
விரல்களில் தர்ச்சனி விரல்மத் திமைகளை
ஆர்த்திடக் கனிட்டை அனாமிகை களினால்
சேர்த்துறப் பிடிப்பது தேனுமுத் திரையே"

இரண்டு கைகளையும் சேர்த்து விரல்களைக் கோத்துச் சுட்டு விரல்கள் நடுவிரல்களையும், நடு விரல்கள் சுட்டு விரல்களையும், அணி விரல்கள் சிறு விரல்களையும், சிறு விரல்கள் அணி விரல்களையும் நுனியோடு நுனி பொருந்த அமைத்துப் பசுவின் முலைக் காம்பு போலப் பிடிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

11. கோமுக முத்திரை

"நடுவிரல் மூன்றையும் நயமுற வளைத்து
இருவிரல் நீட்டல் இனிய கோமுகம்"

நடுவிரல்கள் மூன்றையும் சேர்த்துச் சற்று வளைத்து மற்ற விரல்களை மேல் நோக்கி நீட்டிக் கவிழ்த்துப் பிடிப்பது.

12. சங்க முத்திரை

"தூய பதாகைச் சொற்பெரு விரல்நுதி
ஆயதர்ச் சனிவலத் தடிதொடிற் சங்கம்"

பெரு விரல் நுனியைச் சுட்டு விரல் அடியிற் பொருந்த வளைத்து மற்ற நான்கு விரல்களையும் சேர்த்து நீட்டுவது.

13 . கோகர்ண முத்திரை

இது சங்க முத்திரையை அனுசரித்துப் பிடிப்பது.

14. சாண முத்திரை

இது கோமுக முத்திரையை அனுசரித்துப் பிடிப்பது.

15. மிருக முத்திரை

"கைவிரல் குவித்ததில் கநிட்டைதர்ச் சனியெனு
மெய்விரல் நீட்டிடில் மிருகமுத் திரையே"

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

பெரு விரல், அணி விரல், நடு விரல்களை நுனி பொருந்தச் சேர்த்து மற்ற விரல்களை நீட்டுவது.

16. தீக்ஷண முத்திரை

"பிடித்திடு வலக்கையில் பிறங்குதர்ச் சனிநிமிர்ந்
திடக்கையி லெடுத்திடு மெனில்தீ க்ஷணமே"

சுட்டு விரலை நீட்டி ஏனைய விரல்களை மடக்கிக் கவிழ்த்துப் பிடிப்பது.

17. நிரோதான முத்திரை

"கநிட்டையை நீக்கிக் காணும் விரல்களின்
நுனிகளைச் சேர்ப்பது நுவல்நிரோ தானம்"

சிறு விரலை நீக்கி ஏனைய விரல்களின் நுனிகள் பொருந்தச் சேர்த்துக் குவிப்பது.

18. சங்கார முத்திரை

"அங்குலி நான்கும் அங்குட் டத்தடி
தங்குற வளைப்பது சங்கார முத்திரை"

வலக்கரத்தை முட்டியாகப் பிடித்துப் பெருவிரலை உயர்த்தி நீட்டுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

19. பிரசன்ன முத்திரை

"இருகரங் கூப்பிப் பெருவிரல் நுனிகள்
அணிவிரல் அடியுற ஆம்பிர சன்னம்"

இரண்டு கைகளையும் கூப்பிப் பெருவிரல்களை இணைத்து அவற்றின் நுனிகள் அணிவிரல்களின் அடியிற் பொருந்த உள்ளே மடக்குவது.

20. அதிட்டான முத்திரை

"இருகரம் விரித்துப் பெருவிரல் நுனியால்
அகங்கை தொடுவது அதிட்டா னம்மே"

இரண்டு கைப் பெரு விரல்களினாலும் உள்ளங்கைகளைத் தொடுவது.

21. உஷ்ணீக முத்திரை

"அங்குட்ட நுனியை ஆட்காட்டி நுனியால்
தொடுதல் தடவுதல் தோன்றுமுஷ் ணீகம்"

பெருவிரல் நுனியைச் சுட்டுவிரல் நுனியால் தொடுவது ஒருவகை. விரலில் தடவுவது ஒரு வகை.

22. சின் முத்திரை

இது உஷ்ணீக முத்திரையை அனுசரித்துப் பிடிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

23. மோக முத்திரை

"நடுவிரல் நுனியை நாடும் பெருவிரல்
நுனியால் தொடுவது நுவலும் மோகம்"

நடுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியால் தொடுவது ஒருவகை. விரலில் தடவுவது ஒருவகை.

24. ஆக்கிர முத்திரை

"சிறுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியால்
தொடுதல் தடவுதல் தூய ஆக்கிரம"

சிறு விரல் நுனியைப் பெருவிரல் நுனியால் தொடுவது ஒருவகை. விரலில் தடவுவது ஒருவகை.

25. கடா முத்திரை

"இரண்டு கைகளும் இணைய நடுவிரல்
மூன்றும் அகங்கை முன்தொடக் கடாவாம்"

இரண்டு கைகளையும் இணைத்து நடுவிரல்கள் மூன்றினாலும் உள்ளங் கைகளைத் தொடுவது.

26. ஆவாஹன முத்திரை

இது பிரசன்ன முத்திரையை அனுசரித்துப் பிடிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

27. ஆன்மலீக முத்திரை

"இருகைக் கோமுகம் இயையவோர் கையை
மறுகையாற் சுற்றல் மன்னுமான் மலீகம்"

இரண்டு கைகளிலும் கோமுக முத்திரை பிடித்து ஒரு கையை இன்னொரு கையாற் சுற்றுவது.

28. ஆக்கிர கண்ட முத்திரை

"சிறுவிரல் பெருவிரல் நுனியுற நடுவிரல்
யாவும் நீட்டுதல் ஆக்கிர கண்டம்"

சிறுவிரலைப் பெருவிரலால் வளைத்துப் பிடித்து நடுவிரல்கள் மூன்றையும் நீட்டிப் பிடிப்பது.

29. நாராச முத்திரை

"தர்ச்சனி நீங்கச் சாரும் விரல்களை
முட்டியாய்ப் பிடித்து மொழிதரு கழுத்தின்
வலமிட மாக மார்பி னிடைவரை
நயமுறச் சுற்றுதல் நாராச முத்திரை"

சுட்டு விரல்களை நீக்கி இரு கைகளையும் முட்டியாகப் பிடித்துக் கழுத்தின் வலமிடமாகிய இரு புறங்களிலுமிருந்து மார்பு நடு வரை கொண்டு வருவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

30. உஷ முத்திரை

"ஒருகை அணிவிரல் மறுகை அகம்தொடல்
உஷமுத் திரையென உரைக்கப் பெறுமே"

ஒருகை அணிவிரலால் மற்றொரு உள்ளங் கையைத் தொடுவது.

31. மகா முத்திரை

"விரல்கள் நீண்ட இருகரம் கொண்டு
அடிமுதல் முடிவரை தடவுதல் போல
வைத்துக் காட்டுதல் மகாமுத் திரையே"

விரல்கள் நீண்ட இரு கைகளாலும் பாதம் முதல் சிரசு வரை தடவுவது போல் காட்டுவது.

32. வராக முத்திரை

"வலக்கையி னடுவிரல் மடக்கிப் பெருவிரல்
வலது வாசிமேல் வைத்தணி விரலை
இடது நாசிமே லிணைத்துத் தர்ச்சனி
கநிட்டையை நீட்டுதல் காட்டும் வராகம்"

வலக்கையின் நடுவிரலை மடக்கிப் பெருவிரலை வலது நாசியிலும் அணிவிரலை இடது நாசியிலும் லைத்துச் சுட்டு விரலையும், சிறு விரலையும் நீட் டுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

blic Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta an

33. அங்குச முத்திரை

"பிடித்தகைத் தர்ச்சனி பெருவிர லின்மிசை
அடுத்துற வளைத்திடல் அங்குச முத்திரை"

வலக்கையை முட்டியாகப் பிடித்துப் பெருவிரலை நோக்கிச் சுட்டுவிரலை வளைத்துப் பிடிப்பது.

34. கும்ப முத்திரை

"அகங்கை குழிய அங்குட்டம் நீட்டி
மற்ற விரல்களை வளைப்பது கும்பம்"

வலது உள்ளங்கையைக் குழியப் பிடித்துப் பெருவிரலை நீட்டி மற்ற விரல்கள் உள்ளே வளையப் பிடிப்பது.

35. திரு முத்திரை

"இடதுகைப் பெருவிரல் விடுபடப் பிறவிரல்
இடைவெளி நீர்விடல் இயற்றிரு முத்திரை"

இடதுகைப் பெருவிரல் ஒழிந்த மற்றை விரல்களின் இடைவெளி வழியாக நீர் விடுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and

36. ஊர்த்துவ முகி முத்திரை

"தர்ச்சனி கீழ்முகம் சார நிமிர்ந்துற
மற்றை விரல்களை மடக்கலூர்த் துவமுகி"

சுட்டு விரலைக் கீழ்நோக்கி நீட்டி மற்ற விரல்களை மடக்கிப் பிடிப்பது.

விரல்களின் பெயர்கள்

அங்குட்டம்	--- பெருவிரல்	---	கட்டைவிரல்
தர்ச்சனி	--- சுட்டுவிரல்	---	ஆள்காட்டி விரல்
மத்திமை	--- நடுவிரல்	---	பாம்பு விரல்
அநாமிகை	--- அணிவிரல்	---	மோதிரவிரல்
கநிட்டை	--- சிறுவிரல்	---	சுண்டுவிரல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I

1.
பதாகை.



2.
சிகா.

3
நமஸ்காரம்.

4
திவ்யம்.

5
அதோமுகி.

6
சோத்திகம்.



7
கோவிந்தம்.



8
சோழிகா.



9
அதிதீட்சணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



10 தேனு



11.
கோமுகம்.

12.
சங்கம்.

13
கோகர்ணம்.

14.
சாணம்.



15
மிருகம்.

16
தீட்சணம்.



17.
நிரோதானம்.

18
சங்காரம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I



19
பிரசன்னம்



20
அதிட்டானம்.

21.
உஷ்ணீகம்.

22
சின் முத்திரை.

23
மோகம்.

24
ஆக்ரம்.



25
கடா.



26
ஆவாகனம்.



27
ஆன்மலீகம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and



28
ஆக்ரகண்டம்.



29
நாராசம்.



30
உஷ முத்திரை.

31
மகா முத்திரை.

32.
வராகம்.



33
அங்குசம்.

34.
கும்பம்.



35
திருமுத்திரை.

36
ஊர்த்துவமுகி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and I

RAMESH OFFSET PRINTERS, TRICHY - 8. PH : 702044

Center for Shaiva Studies, Pondicherry Collection